Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Impact Factor 3.5 · Monthly
p422 TIRJTS-2026-0040
DOI: 10.63300/tamilmanam.v12i06.26

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

குறுந்தொகை கூறும் சமுதாய உளவியல் – பாடல் வரிகள் வழியாக ஓர் ஆய்வு

Social Psychology in Kuruntokai: A Study through Its Verses

சு. பத்மா[1,*], திருமதி கி. சங்கீத பிரியா[2]

[1] உதவிப் பேராசிரியர் பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்ணிவாக்கம், சென்னை

[2] உதவிப் பேராசிரியர், உளவியல் துறை பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மண்ணிவாக்கம், சென்னை

***Corresponding author:** சு. பத்மா, jersonpadma8318@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 26 October 2026
Revised: 28 October 2026
Accepted: 5 November 2026

Article ID
TIRJTS-2026-0040

Peer review
Double-blind peer review

Keywords
Kuruntokai
social psychology
gossip (alar)
confidante
modesty
separation
trust
Sangam literature.

ABSTRACT

Sangam literature is a classical treasury that records the ancient Tamil way of life, culture and emotions. Its Akam poems link the inner experiences of human beings — love, union, separation, waiting, lovers' quarrels (oodal) and lament — with the natural world. The five Akam anthologies of the Ettuttokai, namely Natrinai, Kuruntokai, Ainkurunooru, Kalittokai and Akananuru, record the many dimensions of love with great subtlety. This paper examines love life in Sangam Akam poetry through the tinai theory, the codes of kalavu (premarital love) and karpu (married life), the hero–heroine relationship, the role of the confidante (thozhi), separation and waiting, oodal, social responsibility and the bond between nature and human feeling. It argues that love in Sangam poetry is not merely a private emotion but a complete lived experience intertwined with family, social ethics, economic conditions, occupation, nature and culture, and is therefore a vital field for understanding the psychology and social culture of the ancient Tamils.

How to cite this article: சு. பத்மா, & திருமதி கி. சங்கீத பிரியா (2026). குறுந்தொகை கூறும் சமுதாய உளவியல் – பாடல் வரிகள் வழியாக ஓர் ஆய்வு. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, 422. https://doi.org/10.63300/tamilmanam.v12i06.26
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

எட்டுத்தொகை நூல்களுள் சிறப்பிடம் பெற்ற குறுந்தொகை, காதல் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் அவற்றோடு தொடர்புடைய மனிதர்களின் உணர்வுகளையும் நுட்பமாக எடுத்துரைக்கிறது. தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், ஊரார் ஆகிய பாத்திரங்களின் பேச்சு, செயல், எண்ணம், உணர்வு ஆகியவற்றின் வழியாக அக்காலச் சமூகத்தின் உளவியல் வெளிப்படுகிறது. இக்கட்டுரை குறுந்தொகைப் பாடல்களைச் சமுதாய உளவியல் நோக்கில் ஆராய்ந்து, காதல் உணர்வும் சமூக உறவும், நாணமும் சமூகக் கட்டுப்பாடும், தோழியின் உளவியல் பங்கு, பிரிவுத் துயரம், காத்திருத்தலும் நம்பிக்கையும், ஊரார் அலர் ஏற்படுத்தும் சமூக அழுத்தம், தலைவன் மற்றும் தாயின் மனநிலை, ஊடல், பெண்களின் உளவியல் ஆகிய கூறுகளை விளக்குகிறது. குறுந்தொகையில் காதல் என்பது தனிப்பட்ட உணர்வு மட்டுமல்ல; அது சமூகத்துடன் பின்னிப் பிணைந்த உளவியல் நிகழ்வு என்பதையும், அதில் பதிவான உளவியல் உண்மைகள் இன்றைய சமுதாயத்திற்கும் பொருந்துகின்றன என்பதையும் இக்கட்டுரை நிறுவுகிறது.

முக்கியச் சொற்கள்:குறுந்தொகை, சமுதாய உளவியல், அலர், தோழி, நாணம், பிரிவு, நம்பிக்கை, சங்க இலக்கியம்.

Abstract

Kuruntokai, a distinguished anthology of the Ettuttokai, portrays the stages of love and the feelings of the people bound up with them with great subtlety. Through the speech, actions, thoughts and emotions of characters such as the hero, the heroine, the confidante, the foster-mother, the mother and the villagers, the psychology of the society of that age comes to light. This paper reads Kuruntokai from the standpoint of social psychology and examines love and social relations, modesty and social control, the psychological role of the confidante, the grief of separation, waiting and trust, the social pressure created by village gossip (alar), the mental states of the hero and the mother, lovers' quarrels (oodal) and the psychology of women. It argues that love in Kuruntokai is not merely a private feeling but a psychological event interwoven with society, and that the psychological truths it records remain relevant to contemporary society.

Keywords:*Kuruntokai, social psychology, gossip (alar), confidante, modesty, separation, trust, Sangam literature.*

1. முன்னுரை

தமிழரின் பழந்தமிழ் வாழ்க்கையை அறிந்துகொள்வதற்குச் சங்க இலக்கியங்கள் மிகச் சிறந்த ஆதாரங்களாகத் திகழ்கின்றன. சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகை, எட்டுத்தொகை நூல்களுள் சிறப்பிடம் பெற்றது. அகப்பொருள் சார்ந்த இந்நூல் காதல் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும், அவற்றோடு தொடர்புடைய மனிதர்களின் உணர்வுகளையும் நுட்பமாக எடுத்துரைக்கிறது.

குறுந்தொகைப் பாடல்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாங்கன் போன்ற பல்வேறு பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இவர்களின் பேச்சு, செயல்பாடு, எண்ணம், உணர்வு ஆகியவற்றின் வழியாக அக்காலச் சமூகத்தின் உளவியல் வெளிப்படுகிறது. குறிப்பாகக் காதல், பிரிவு, காத்திருத்தல், ஊடல், அச்சம், நாணம், நம்பிக்கை, சமூகக் கட்டுப்பாடு போன்ற உணர்வுகள் தனிமனித உளவியலாக மட்டுமல்லாமல், சமூக உளவியலாகவும் வெளிப்படுகின்றன.

எனவே, குறுந்தொகையை வெறும் காதல் பாடல்களின் தொகுப்பாகக் கருதாமல், பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் மனநிலையைப் பதிவு செய்த இலக்கிய ஆவணம் என்ற அடிப்படையில் அணுகலாம்.

2. ஆய்வின் நோக்கங்கள்

- குறுந்தொகைப் பாடல்களில் வெளிப்படும் தனிமனித உணர்வுகளுக்கும் சமூகச் சூழலுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்தல்.
- தோழி, தாய், ஊரார் ஆகிய சமூகப் பாத்திரங்கள் காதலர்களின் மனநிலையில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்குதல்.
- குறுந்தொகையில் பதிவாகியுள்ள உளவியல் உண்மைகள் இன்றைய சமுதாயத்திற்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதை மதிப்பிடுதல்.

3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு விளக்கமுறை, பகுப்பாய்வு முறை, பல்துறை (இலக்கியம்–உளவியல்) அணுகுமுறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. குறுந்தொகையின் தலைவி கூற்று, தலைவன் கூற்று, தோழி கூற்றுப் பாடல்கள் முதன்மைத் தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. சமூக உளவியலின் சமூகச் செல்வாக்கு (Social Influence), சமூக நெறிமுறைகள் (Social Norms), சமூக ஆதரவு (Social Support), பாத்திர முரண்பாடு (Role Conflict) ஆகிய கருத்தாக்கங்கள் பகுப்பாய்வுச் சட்டகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

4. சமுதாய உளவியல் – பொருள்

ஒரு மனிதனின் எண்ணங்களையும் செயல்களையும் அவன் வாழும் சமூகம் பெரிதும் பாதிக்கிறது. குடும்பம், உறவுகள், பழக்கவழக்கங்கள், சமூக மரபுகள், பண்பாடு, பொருளாதாரம் போன்றவை மனிதனின் உளநிலையை உருவாக்குகின்றன. பிறரின் உண்மையான, கற்பனையான அல்லது எதிர்பார்க்கப்படும் இருப்பு ஒருவரின் எண்ணம், உணர்வு, நடத்தை ஆகியவற்றில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதை ஆராயும் துறையே சமுதாய உளவியல் எனப்படுகிறது.

குறுந்தொகையில் தனிமனித உணர்வு சமூகத்தின் பார்வையோடு இணைந்தே வெளிப்படுகிறது. தலைவன்–தலைவி உறவு, தோழியின் இடையீடு, ஊரார் அலர்,

குடும்பத்தின் எதிர்பார்ப்பு ஆகியவை காதலர்களின் மனநிலையைப் பாதிக்கின்றன. இதனால் குறுந்தொகையில் காணப்படும் காதல் என்பது தனிப்பட்ட உணர்வு மட்டுமல்ல; அது சமூகத்துடன் தொடர்புடைய உளவியல் நிகழ்வு ஆகும்.

5. காதல் உணர்வும் சமூக உளவியலும்

குறுந்தொகையின் முக்கியப் பொருள் காதல். தலைவன் தலைவியைச் சந்திப்பதும், தலைவி தலைவனை விரும்புவதும் இயற்கையான உணர்வுகளாகக் காட்டப்படுகின்றன. ஆனால் அந்தக் காதலைச் சமூகத்தின் கட்டுப்பாடுகள் பாதிக்கின்றன. ஒரு பாடலில் தலைவன்–தலைவியரிடையிலான அன்பின் ஆழம் இயற்கையோடு ஒப்பிடப்படுகிறது:

யாயும் ஞாயும் யாரா கியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.

(குறுந்தொகை 40, செம்புலப் பெயனீரார்)

இப்பாடல் குறுந்தொகை 40-ஆம் பாடலாகும்; தலைவன் கூற்றாக அமைந்தது. தலைவன்–தலைவி இருவருக்கும் முன்பிருந்த குடும்ப உறவு இல்லாவிட்டாலும், அவர்களது உள்ளங்கள் மழைநீரும் செம்மண்ணும் கலப்பதைப் போல இயற்கையாக ஒன்றிணைந்தன என்று தலைவன் கூறுகிறான்.

இங்குக் காதல் என்பது சமூக உறவுகளைத் தாண்டிய உள்ளங்களின் இணைவு எனப் புலப்படுத்தப்படுகிறது. ‘யாய், ஞாய், எந்தை, நுந்தை’ எனக் குடும்ப உறவுமுறைச் சொற்களை அடுக்கி அவற்றை மறுப்பதன் மூலம், உறவுமுறை சார்ந்த சமூக அடையாளத்தைக் கடந்து தனிமனிதத் தேர்வின் அடிப்படையில் உருவாகும் உறவை இப்பாடல் முன்னிறுத்துகிறது. குடும்ப உறவுகள் இல்லாத இருவர் உள்ளத்தால் ஒன்றுபடுவது சமூக உளவியலில் ஏற்படுத்தும் மாற்றத்தையும் இது சுட்டுகிறது.

6. நாணமும் சமூகக் கட்டுப்பாடும்

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் நடத்தைக்குப் பல்வேறு சமூக எதிர்பார்ப்புகள் இருந்தன. நாணம், அடக்கம், கற்பு போன்ற பண்புகள் பெண்களின் சிறப்பாகக் கருதப்பட்டன. இதனால் தலைவி தன் காதலை வெளிப்படையாகச் சொல்ல முடியாத சூழல் பல பாடல்களில் காணப்படுகிறது. தலைவியின் மனதில்

காதல் பெருகினாலும், அதனை வெளிப்படுத்துவதற்குச் சமூகக் கட்டுப்பாடுகள் தடையாக அமைகின்றன.

தலைவியின் உள்ளத்தில் தோன்றும் காதலும், அதனை வெளிப்படுத்த முடியாத நிலையும் உள் முரண்பாட்டை உருவாக்குகின்றன. சமூக உளவியல் இதனைச் சமூக நெறிமுறைகளுக்கும் (Social Norms) தனிமனித விருப்பத்திற்கும் இடையிலான முரண்பாடாகக் காண்கிறது. இத்தகைய உள்மனப் போராட்டங்கள் குறுந்தொகைப் பாடல்களில் மிக நுட்பமாகக் காட்டப்படுகின்றன. இது இன்றைய சமுதாயத்திலும் காணப்படும் ஓர் உளவியல் உண்மையாகும்.

7. தோழியின் உளவியல் பங்கு

குறுந்தொகையில் தோழி முக்கியமான சமூகப் பாத்திரமாக விளங்குகிறாள். தலைவிக்கும் தலைவனுக்கும் இடையிலான உறவில் தோழி நடுநிலையாளராகச் செயல்படுகிறாள். தலைவியின் மனநிலையைப் புரிந்துகொள்ளும் தோழி, தலைவனிடம் அவளுடைய துயரத்தைக் கூறுகிறாள். சில நேரங்களில் தலைவனின் தவறைச் சுட்டிக்காட்டுகிறாள். வேறு சில சமயங்களில் தலைவியின் மனக்கவலையைத் தீர்க்கும் வகையில் அறிவுரை வழங்குகிறாள்.

இதனால் தோழி ஒரு சாதாரணத் துணைப் பாத்திரமாக இல்லாமல், உளவியல் ஆலோசகராகவும் சமூக இணைப்பாளராகவும் செயல்படுகிறாள். தலைவி தன் உள்ளத்தில் மறைத்துக்கொண்டிருக்கும் உணர்வுகளைத் தோழியிடம் பகிர்ந்துகொள்கிறாள்.

நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே

இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி

அமைதற் கமைந்தநங் காதலர்

அமைவில ராகுதல் நோமென் நெஞ்சே.

(குறுந்தொகை 4, காமஞ்சேர் குளத்தார்)

தன் கண்ணீரைத் துடைத்து ஆற்றுவதற்குரிய காதலர் இப்போது அவ்வாறு இல்லையே என்று தலைவி தோழியிடம் மனம் திறந்து வருந்துகிறாள். உணர்வுகளை நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் வெளிப்படுத்துவது மன அழுத்தத்தைக் குறைக்கும் என்பது சமூக ஆதரவு (Social Support) குறித்த உளவியல் கருத்தாகும். இதன் மூலம் பெண்களிடையே நிலவிய நம்பிக்கை, நட்பு, உணர்வுப் பகிர்வு போன்ற சமூக உளவியல் கூறுகளை அறிய முடிகிறது.

8. பிரிவுத் துயரமும் மனநிலையும்

தலைவன் பொருள் தேடுதல், போர் அல்லது வேறு காரணங்களுக்காகப் பிரிந்து செல்லும் சூழல் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. தலைவனின் பிரிவு தலைவியின் மனதில் பெரும் துயரத்தை ஏற்படுத்துகிறது. பிரிவினால் ஏற்படும் தனிமை, கவலை, எதிர்பார்ப்பு, நினைவு ஆகியவை குறுந்தொகையில் இயற்கைக் காட்சிகளுடன் இணைத்து வெளிப்படுத்தப்படுகின்றன.

நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்து

இனிதடங் கினரே மாக்கள் முனிவின்று

நனந்தலை உலகம் துஞ்சும்

ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

(குறுந்தொகை 6, பதுமனார்)

உலகம் முழுவதும் உறங்கும்போது தான் ஒருத்தி மட்டும் உறங்காமல் இருப்பதாகத் தலைவி கூறுகிறாள். சமூகம் முழுவதும் ஒரு நிலையில் இருக்க, தான் மட்டும் வேறுபட்டு நிற்கும் இந்நிலை, சமூகத் தனிமைப்படல் (Social Isolation) உணர்வை ஆழமாக வெளிப்படுத்துகிறது.

தலைவனின் பிரிவுக்குப் பின்னர் தலைவியின் மனநிலை மாறுகிறது. அவள் சுற்றியுள்ள இயற்கைக் காட்சிகளிலும் தலைவனை நினைவுகூர்கிறாள். இதனை உளவியலில் நினைவின் தாக்கம் என்று கூறலாம். ஒருவரை ஆழமாக நேசிக்கும்போது, அவருடன் தொடர்புடைய பொருட்களும் இடங்களும் நினைவுகளைத் தூண்டுகின்றன. இந்த உண்மையைச் சங்கப் புலவர்கள் இயற்கை உருவகங்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

9. காத்திருத்தலும் நம்பிக்கையும்

குறுந்தொகையில் தலைவி தலைவனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையும் முக்கியமானது. காத்திருத்தல் என்பது வெறும் நேரத்தைக் கடத்துதல் அல்ல. அது நம்பிக்கை, எதிர்பார்ப்பு, அச்சம் ஆகிய பல உணர்வுகளின் கலவையாகும். தலைவன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை தலைவியின் மனதிற்கு ஆறுதலை அளிக்கிறது. அதே நேரத்தில், அவன் வருவதில் ஏற்படும் தாமதம் அவளிடம் கவலையையும் ஏற்படுத்துகிறது.

... புதுப்பூங் கொன்றைக்

கானம் காரெனக் கூறினும்

யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே.

(குறுந்தொகை 21, ஓதலாந்தையார்)

கொன்றை பூத்த காடு கார்காலம் வந்துவிட்டதாக அறிவித்தாலும், தலைவன் பொய் சொல்லாதவன் என்பதால் அவன் குறித்த பருவம் இன்னும் வரவில்லை என்று தலைவி தன்னைத் தேற்றிக்கொள்கிறாள். உளவியல் நோக்கில் இது எதிர்பார்ப்புக்கும் உண்மைக்கும் இடையிலான முரண்பாட்டைத் (Cognitive Dissonance) தணிக்கும் மனச் செயல்பாடாகவும் கருதத்தக்கது. இதனால் காத்திருத்தல் என்பது ஓர் உளவியல் செயல்முறை ஆகிறது. குறுந்தொகை இத்தகைய நுண்ணிய உணர்வுகளை இயற்கையோடு இணைத்து அழகாக வெளிப்படுத்துகிறது.

10. ஊரார் அலரும் சமூக அழுத்தமும்

குறுந்தொகையில் காதலர்களின் உறவைப் பாதிக்கும் மற்றொரு முக்கியமான சமூகக் கூறு ஊரார் அலர் ஆகும். காதலர்களின் உறவு பிறருக்குத் தெரியும்போது சமூகத்தில் பேசப்படும் பேச்சு அவர்களின் மனநிலையைப் பாதிக்கிறது. இதனால் தலைவியும் தலைவனும் தங்கள் உறவைப் பற்றிய சமூக மதிப்பீட்டைக் கருத்தில் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஒருவரைப் பற்றிய பிறருடைய கருத்து அவருடைய மனநிலையை மாற்றக்கூடும். இதுவே சமூக உளவியலின் முக்கியமான அம்சமாகும். குறுந்தொகையில் ‘அலர்’ என்பது வெறும் வதந்தி அல்ல. அது தனிமனித வாழ்க்கையில் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் ஒரு கருவியாக விளங்குகிறது. அதேவேளையில், அலர் எழுவது தலைவனை வரைவுக்கு (திருமணத்திற்கு) விரைவுபடுத்தும் காரணியாகவும் அமைகிறது. இவ்வகையில் சமூகப் பேச்சு காதல் உறவைச் சமூக அங்கீகாரம் பெற்ற இல்லற உறவாக மாற்றும் முறைசாரா சமூகச் செல்வாக்காகச் (Informal Social Influence) செயல்படுகிறது.

11. தலைவனின் உளப்பாங்கு

தலைவனின் மனநிலையும் குறுந்தொகையில் பல்வேறு கோணங்களில் வெளிப்படுகிறது. காதல், பிரிவு, பொருள் தேடுதல், தலைவியைச் சந்திக்க விரும்புதல் போன்ற உணர்வுகள் அவனுடைய செயல்களை நிர்ணயிக்கின்றன.

வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே.

(குறுந்தொகை 135)

ஆடவர்க்குச் செயலே உயிர் என்ற சமூக எதிர்பார்ப்பு தலைவனைப் பொருள்தேடிப் பிரியத் தூண்டுகிறது. தலைவன் சில நேரங்களில் தன் விருப்பத்திற்கும் சமூகப் பொறுப்பிற்கும் இடையில் சிக்கிக்கொள்கிறான். இதனைச் சமூக உளவியல் ‘பாத்திர

முரண்பாடு' (Role Conflict) என்று குறிப்பிடுகிறது. காதலியை விட்டுப் பிரிய வேண்டிய சூழல் அவனுக்கும் மனவேதனையை ஏற்படுத்துகிறது.

இதன் மூலம் ஆண்களின் உணர்வுகளும் சங்க இலக்கியத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்ததை அறிய முடிகிறது. தலைவன் வெறும் வீரனாக மட்டுமல்லாமல், அன்பு, பிரிவு, கவலை, பொறுப்பு போன்ற உணர்வுகளைக் கொண்ட மனிதனாகவும் காட்டப்படுகிறான்.

12. தாயின் மனநிலை

குறுந்தொகையில் நற்றாய், செவிலித்தாய் போன்ற பாத்திரங்களும் இடம்பெறுகின்றன. இவர்கள் தலைவியின் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படுகின்றனர். தாயின் பார்வையில் மகளின் பாதுகாப்பு, குடும்ப மரியாதை, சமூகப் புகழ் ஆகியவை முக்கியமானவை. மகளின் காதல் வாழ்க்கையைப் பற்றிய அச்சமும் அக்கறையும் தாயின் மனநிலையை நிர்ணயிக்கின்றன. மகளின் உடல் மெலிவைக் கண்டு வெறியாட்டு நிகழ்த்துதல் போன்ற செயல்கள், மகளின் அக நிலையைப் புரிந்துகொள்ள இயலாத தாயின் அக்கறையையும் அதனால் தலைவிக்கு ஏற்படும் மனநெருக்கடியையும் காட்டுகின்றன. இதன் மூலம் குடும்ப உறவுகளில் அன்பும் கட்டுப்பாடும் ஒன்றோடொன்று இணைந்து காணப்பட்டதை அறிய முடிகிறது.

13. இயற்கையும் மனித உளவியலும்

குறுந்தொகையின் தனிச்சிறப்பு மனித உணர்வுகளை இயற்கையோடு இணைத்துக் காட்டுவதாகும். ஐந்திணை மரபின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்கள் மனித வாழ்க்கையின் பல்வேறு உணர்வுகளோடு தொடர்புபடுத்தப்படுகின்றன.

அட்டவணை 1: ஐந்திணையும் மனநிலையும்

திணை	உரிப்பொருள்	உளவியல் நிலை
குறிஞ்சி	புணர்தல்	இணைவு, மகிழ்ச்சி
முல்லை	இருத்தல்	நம்பிக்கையுடன் காத்திருத்தல்
மருதம்	ஊடல்	உரிமை உணர்வு, உணர்ச்சிச் சார்பு
நெய்தல்	இரங்கல்	ஏக்கம், தனிமை
பாலை	பிரிதல்	பிரிவுக் கவலை, அச்சம்

இதனால் இயற்கை என்பது குறுந்தொகையில் வெறும் பின்னணியாக மட்டும் அமையவில்லை. அது மனிதனின் மனநிலையை வெளிப்படுத்தும் உளவியல் குறியீடாக விளங்குகிறது.

14. ஊடலும் சமரசமும்

காதல் வாழ்க்கையில் ஏற்படும் சிறிய முரண்பாடுகள் குறுந்தொகையில் ஊடல் என்ற நிலையில் வெளிப்படுகின்றன. தலைவனின் செயலால் தலைவி வருத்தமடைவதும், அவனிடம் கோபம் கொள்வதும், பின்னர் உறவு மீண்டும் சீரடைவதும் மனித உறவுகளின் இயல்பை வெளிப்படுத்துகின்றன. ஊடல் என்பது வெறுப்பின் வெளிப்பாடு மட்டுமல்ல; அதற்குள் அன்பு, எதிர்பார்ப்பு, உரிமை உணர்வு ஆகியவை அடங்கியுள்ளன. தலைவியின் ஊடலுக்குப் பின்னால் தலைவனிடம் உள்ள அன்பும் அவனை இழந்துவிடக்கூடாது என்ற அச்சமும் காணப்படுகின்றன. இதன் மூலம் காதல் உறவுகளில் உரிமை உணர்வும் உணர்ச்சிச் சார்பும் முக்கியப் பங்கு வகிப்பதை அறியலாம்.

15. நம்பிக்கையும் உறவின் வலிமையும்

குறுந்தொகைப் பாடல்களில் தலைவன்–தலைவி உறவு பல்வேறு சோதனைகளை எதிர்கொண்டாலும், அன்பு மற்றும் நம்பிக்கையின் மூலம் அது தொடர்கிறது. தலைவியின் மனதில் தலைவனைப் பற்றிய நம்பிக்கை இருப்பது அவளுக்கு மனவலிமையை அளிக்கிறது. தோழியின் துணையும் அவளுடைய மனக்கவலையைத் தணிக்கிறது. இதனால் மனித வாழ்க்கையில் நம்பிக்கை என்பது மனநலத்திற்கும் சமூக உறவுகளுக்கும் அடிப்படை என்பதைக் குறுந்தொகை உணர்த்துகிறது.

16. பெண்களின் உளவியல்

குறுந்தொகையின் முக்கியமான சிறப்புகளில் ஒன்று பெண்களின் மனநிலையை மிக நுட்பமாக வெளிப்படுத்துவதாகும். தலைவி காதலிக்கிறாள்; காத்திருக்கிறாள்; பிரிவால் வருந்துகிறாள்; ஊடுகிறாள்; நாணுகிறாள்; அச்சப்படுகிறாள்; அதே நேரத்தில் தன் காதலில் உறுதியுடனும் இருக்கிறாள். இத்தகைய பல்வேறு உணர்வுகளும் பெண் பாத்திரத்தின் உளவியல் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன.

தலைவி செயலற்றவளாக மட்டும் காட்டப்படவில்லை. பல பாடல்களில் அவள் தன் கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகிறாள். இதனால் சங்ககாலப் பெண்ணின் மனவலிமை, உணர்வுத் திறன், முடிவெடுக்கும் தன்மை ஆகியவற்றையும் குறுந்தொகை வெளிப்படுத்துகிறது.

17. சமூக உறவுகளின் முக்கியத்துவம்

குறுந்தொகையில் தனிமனித வாழ்க்கை சமூகத்திலிருந்து பிரிந்து காணப்படவில்லை. தலைவன், தலைவி, தோழி, தாய், செவிலி, ஊரார் எனப் பலரும் ஒருவரின் வாழ்க்கையில் மற்றொருவர் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இதனால் அக்காலச் சமூகத்தில் உறவுகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் தெளிவாகிறது. காதல் என்பது இருவரின் உறவாகத் தொடங்கினாலும், அது குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், ஊர் மக்கள் ஆகியோரின் பார்வையோடும் தொடர்புடையதாகிறது.

அட்டவணை 2: குறுந்தொகைப் பாத்திரங்களும் சமூக உளவியல் பங்கும்

பாத்திரம்	சமூகப் பங்கு	உளவியல் தாக்கம்
தோழி	இடைநிலையாளர், ஆலோசகர்	சமூக ஆதரவு, உணர்வுப் பகிர்வு
நற்றாய் / செவிலி	பாதுகாவலர்	அக்கறை, கட்டுப்பாடு
ஊரார்	சமூக மதிப்பீட்டாளர்	அலர் வழிச் சமூக அழுத்தம்
தலைவன்	பொருளீட்டுபவன், காதலன்	பாத்திர முரண்பாடு
தலைவி	காதலி, காத்திருப்பவள்	நெறி–விருப்ப முரண்பாடு, மனவலிமை

18. குறுந்தொகை உணர்த்தும் இன்றைய சமுதாயப் பொருத்தம்

குறுந்தொகை சங்ககாலச் சமூகத்தைப் பிரதிபலித்தாலும், அதில் காணப்படும் பல உளவியல் உண்மைகள் இன்றும் பொருந்துகின்றன. காதல், நட்பு, நம்பிக்கை, பிரிவு, காத்திருத்தல், குடும்ப அக்கறை, சமூக அழுத்தம், பிறர் கருத்தைப் பற்றிய அச்சம் போன்றவை இன்றைய மனிதர்களிடமும் காணப்படுகின்றன. இன்று சமூக ஊடகங்களின் வழியாகப் பரவும் கருத்துகள் தனிமனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் அழுத்தம், சங்ககால 'அலரின்' நவீன வடிவமாகக் கருதத்தக்கது. காலம் மாறினாலும் மனிதனின் அடிப்படை உணர்வுகள் பெரிதாக மாறவில்லை. இதுவே குறுந்தொகையின் நிலையான சிறப்பாகும்.

19. ஆய்வு முடிவுகள்

- குறுந்தொகையில் காதல் தனிமனித உணர்வாக மட்டுமல்லாமல் சமூக நெறிகள், குடும்ப எதிர்பார்ப்புகள், ஊரார் கருத்து ஆகியவற்றால் வடிவமைக்கப்படும் சமூக உளவியல் நிகழ்வாக வெளிப்படுகிறது.
- தோழி சமூக ஆதரவு வழங்கும் உளவியல் ஆலோசகராகவும், ஊரார் அலர் முறைசாரா சமூகக் கட்டுப்பாட்டுக் கருவியாகவும் செயல்படுகின்றனர்.

- தலைவனின் பிரிவு பாத்திர முரண்பாட்டையும், தலைவியின் காத்திருப்பு நம்பிக்கை சார்ந்த மனச் செயல்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன.
- குறுந்தொகையில் பதிவான உளவியல் உண்மைகள் இன்றைய சமுதாயத்திற்கும் பொருந்தும் நிலையான மதிப்புடையவை.

20. முடிவுரை

குறுந்தொகை என்பது காதல் உணர்வுகளை மட்டும் கூறும் நூல் அல்ல. அது சங்ககாலத் தமிழரின் தனிமனித மற்றும் சமுதாய உளவியலைப் பதிவு செய்த சிறந்த இலக்கியப் படைப்பு ஆகும். தலைவன்–தலைவி காதல், தோழியின் நடுநிலைப் பங்கு, தாயின் அக்கறை, ஊரார்ின் அலர், பிரிவுத் துயரம், காத்திருத்தல், நாணம், ஊடல், நம்பிக்கை போன்ற பல்வேறு உளவியல் கூறுகள் குறுந்தொகையில் நுட்பமாகப் பதிவாகியுள்ளன.

குறிப்பாக, ‘செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே’ என்ற வரிகள் இரு உள்ளங்களின் இயற்கையான இணைப்பை மட்டும் காட்டவில்லை; மனித உறவின் ஆழத்தையும் எடுத்துரைக்கின்றன.

எனவே, குறுந்தொகையை உளவியல் நோக்கில் ஆராயும்போது, சங்ககாலத் தமிழரின் உணர்வுலகம், குடும்ப உறவுகள், சமூகக் கட்டுப்பாடுகள், பெண்களின் மனநிலை, காதலின் இயல்பு, சமூகத்தின் தாக்கம் ஆகியவற்றைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. மனித மனத்தின் நுண்ணிய உணர்வுகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியமாகப் பதிவு செய்த பெருமை குறுந்தொகைக்கு உண்டு.

துணைநூற்பட்டியல்

References

குறுந்தொகை – உ.வே. சாமிநாதையர் பதிப்பு. சென்னை: உ.வே.சா. நூல் நிலையம்.

குறுந்தொகை – மூலமும் உரையும். இரா. இராகவையங்கார். சென்னை.

ச. வையாபுரிப்பிள்ளை. சங்க இலக்கியம் – எட்டுத்தொகை. சென்னை.

ந. சுப்பிரமணியன். சங்க இலக்கியப் பொருளியல். சென்னை.

மு. வரதராசனார். சங்க இலக்கியத்தில் அகப்பொருள். சென்னை.

மு. வரதராசனார். தமிழ் இலக்கிய வரலாறு. புதுதில்லி: சாகித்திய அகாதெமி.

கா. சிவத்தம்பி. சங்க இலக்கிய ஆய்வுகள். சென்னை.

வ. சுப. மாணிக்கம். தமிழ்க் காதல். சென்னை.

Allport, G. W. (1954). The historical background of social psychology. In G. Lindzey (Ed.), Handbook of Social Psychology (Vol. 1). Cambridge, MA: Addison-Wesley.

Festinger, L. (1957). A Theory of Cognitive Dissonance. Stanford, CA: Stanford University Press.

Cohen, S., & Wills, T. A. (1985). Stress, social support, and the buffering hypothesis. Psychological Bulletin, 98(2), 310–357.